இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் முன்னிலையில்

**ஜி.டிலீப் அமுதன் எதிர் கல்வி, கலசார விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு, வடமாகாண சபை**

**RTIC Appeal/20/2017**(*10.07.2017 அன்று இடம்பெற்ற ஆணைக்குழுவின் கூட்டத்தின் போது நடாத்தப்பட்டது*)

ஆணைக்குழு தலைவர்: திரு.மஹிந்த கம்மம்பில
ஆணைக்குழு உறுப்பினர்கள்: சிரேஷ்ட சட்டத்தரணி. செல்வி. கிஷாலி பின்டோ- ஜெயவர்த்தன
சிரேஷ்ட சட்டத்தரணி. திரு.எஸ்.ஜி. புஞ்சிஹேவா
நீதியரசர். ஏ.டபிள்யு.ஏ.சலாம்
கலாநிதி. செல்வி திருச்சந்திரன்

மேன்முறையீட்டாளர்: ஜி. டிலீப் அமுதன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

பகிரங்க அதிகார சபையை பிரதிநிதித்துவம் செய்தவர்: குறித்தளிக்கப்பட்ட அதிகாரியான வடமாகாண கல்வி, கலாசார விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரை அவ்வமைச்சின் தகவல் உத்தியோகத்தர் மற்றும் பிரதி செயலாளரான திருமதி.பி.அபிராமி பிரதிநிதித்துவம் செய்தார்.

மேன்முறையீட்டாளர் தனது தகவல் கோரிக்கையில் வடமாகாண கல்வி, கலசார விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர், அமைச்சராக பதவியேற்றதில் இருந்து அதாவது 2013/10/13 முதல் 31/01/2017 வரை மேற்கொண்ட வெளிநாட்டு பயணங்கள் தொடர்பான தகவலை கோரியிருந்தார். அவரது கோரிக்கை பிரிவு 5(1)(k) ஐ அடிப்படையாக கொண்டு மாகாண சபை உறுப்பினர்களின் சிறப்புரிமையின் கீழ் நிராகரிக்கப்பட்டது. பின்னர் குறித்த அமைச்சர் கடிதம் மூலம் மேன்முறையீட்டாளரால் கோரப்பட்ட தகவலை வழங்குமாறு பகிரங்க அதிகாரசபைக்கு அறிவித்ததை தொடர்ந்து அவை மேன்முறையீட்டாளருக்கு 12/05/2017 அன்று திகதியிட்ட கடிதத்தின் மூலம் வழங்கப்பட்டது.

**ஆணைக்குழுவின் ஆணை**

மேன்முறையீட்டாளர் கோரிய தகவல் பகிரங்க அதிகாரசபையால் அவருக்கு வழங்கப்பட்டுள்ளதால் இருதரப்பு இணக்கத்துடன் இவ்விசாரணை முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.